பத்திரிக்கைச் செய்தி

செ.வெ.எண்:11 நாள்: 09.08.2010

தமிழ்நாடு அரசால் உருவாக்கப்பட்ட கட்டுமானத் தொழிலாளர் நலவாரியம், உடல் உழைப்பு தொழிலாளர்கள், தையல் தொழிலாளர், முடிதிருத்துவோர், சலவைத் தொழிலாளர், பனைமரம் ஏறுவோர், கைவினைஞர், கைத்தறி தொழிலாளர், காலணித் தோல் பொருள் தொழிலாளர், ஓவியர், பொற்கொல்லர், மண்பாண்டத் தொழிலாளர், வீட்டுப்பணியாளர், ஆட்டோ மற்றும் வாடகை ஊர்தி ஓட்டுநர், விசைத்தறி தொழிலாளர் மற்றும் பதையோர வணிகர் மற்றும் கடைகள் நிறுவனங்களில் பணிபுரிவோர் ஆகிய 16 தொழிலாளர் நல வாரியங்களில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள தொழிலாளர்களைப் பதிவு செய்தல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்குதல் பணி புதுக்கோட்டை, மார்த்தாண்டபுரம் முதல் வீதியில் உள்ள தொழிலாளர் அலுவலர்(சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகத்தில் நடைபெற்று வருகிறது.

தொழிலாளர்களின் நலனைக் கருதி 17-08-2010 செவ்வாய்க்கிழமை அன்று கீரனூர் தேர்வுநிலை பேரூராட்சி அலுவலகத்தில் தொழிலாளர்கள் பதிவு சிறப்பு சேர்க்கை முகாம், புதுக்கோட்டை தொழிலாளர் அலுவலர்(சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அவர்களால் நடத்தப்படவுள்ளது. எனவே, கீரனூர் வட்டத்தில் உள்ள மேற்குறிப்பிட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள, இதுவரை பதிவு செய்யாத தொழிலாளர்கள், சிறப்பு சேர்க்கை முகாமில், போட்டோ 3 நகல்கள், சான்றிடப்பட்ட குடும்ப அட்டை நகல், வாக்காளர் அட்டை நகல், வயது சான்று ஆகியவற்றுடன் விண்ணப்பம் செய்து வாரியத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.ஆ.சுகந்தி.இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.